## இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம் - 2023

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்பகக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் உள்ளிட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது தகவல்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2023 இன் 17 ஆம் இலக்க வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 54(2) ஆம் பிரிவிலுலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிதியத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் ரூபா 24.1 பில்லியன் இலாபத்தை விளைவித்திருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 18.2 பில்லியனாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5.9 பில்லியன் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிதிக் கருவிகள் மீதான வட்டி வருமானம் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்துக்கான பிரதான காரணியாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உறுப்பினர் நிறுவனங்களுக்கான கடன்கள் (எம்ஐ கள்)

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பக காப்புறுதித் திட்ட பிரமாணங்களின் பிரிவு 8.1(ii) இன் படி {2023 நவம்பர் 14 ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும் 2021 இன் 2 ஆம் இலக்க இலங்கை வைப்பக காப்புறுதித் திட்ட பிரமாணங்களின் பிரிவு 8.1(ii)} எந்தவொரு எம்ஐ க்கும் வழங்கப்படுகின்ற பிணைக் கடன்கள் அல்லது முற்பணங்கள் அத்தகைய உறுப்பு நிறுவனத்தில் கடுமையான திரவத்தன்மை நெருக்கடிச் சந்தர்பங்களில் வழங்கப்படும். அதன்படி, 2014 டிசம்பர் 15 அன்று ஒரு எம்ஐ க்கு ரூபா 6 பில்லியன் கடன் வழங்கப்பட்டது. அந்தக் கடனில் | இந்தக் கடன் ஒரு பிணைக் கடனாக இருப்பதால், 2019 ஆம் ஆண்டில் மேலதிக பிணையாக குறிப்பிட்ட உறுப்பினர் நிறுவனத்தால் திட்டத்திற்கு அடமானம் வைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ள்ள கோரிக்கை உள்ளடக்கிய குறிப்பிட்ட | நிலுவைத் தொகையை மீட்டெடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 186.7 மில்லியன் 2023 அக்டோபர் 27 அன்று பெறப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கடனின் பெறத்தக்க தொகை ரூபா 1.3 பில்லியன் ஆகும். நிதி வணிகத்தை மேற்கொள்வதற்காக மேற்படி எம்ஜ இற்கு வழங்கப்பட்ட உரிமமானது இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நாணயச் சபையினால் 2020 மே 22 முதல் இரத்து செய்யப்பட்டது. இந்தக் கடனைப் பொறுத்தமட்டில், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலை அறிக்கைகளில் ரூபா 1.2 பில்லியன் மொத்த மதிப்பிழப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023.03.21 அன்று கலைக்கும் நீதிமன்றத்தால் ஒரு கலைப்பாளர் நியமிக்கப்பட்டார். கலைத்தல் தொடங்கும் தேதியில் (16.02.2021) நிலுவையில் உள்ள எம்ஜ இன் பிணைக் கடனுக்கான கோரிக்கையை 2023.08.14 அன்று திட்டம் சமர்ப்பித்துள்ளது. மீளாய்வாண்டின்டு இறுதியில் உள்ளவாறு தீர்த்து வைப்பதற்கான கலைத்தல் செயல்முறை இடம்பெற்று வருகின்றது. | தொகையை உறுப்பினர் நிறுவனத்தின் தலைமை அலுவ லகச் சொத்தின் பாதுகாப்பிலிருந்து இந்தக் கடன் நிலுவைத் தொகை யை மீட்டெடுக்க திட்டத்துக்கு முடியும். |

### 3.2 இனங்காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரின் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி திட்டத்தினால் பின்னூட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு பிணையினையும் சமர்ப்பிக்காது மீளெடுத்திரு ந்தார். அதன்படி, 2015 டிசம்பர் 31 அன்று திட்டத்தின் நிதிநிலை அறிக்கையில் மேற்குறித்த முதலீட்டிற்காக ரூபா 144.25 மில்லியன் மதிப்பிழப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2017.07.24 முதல் அரசுப் பத்திரங்களின் முதன்மை ஏலங்களில் பங்கேற்பதைத் தவிர்க்குமாறு இந்த முதன்மை வணிகர் அறிவுறுத்தப்பட்டிருந்தார். 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் படி, இந்த கம்பனியின் பிணையற்ற முதலீட்டாளர்களில் ஒருவரால் கலைக்கப்பட்ட கடன்கொடுத்தோர் ஒருவருக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டு 2022.06.17 அன்று நீதிமன்றத்தால் கலைப்பு உத்தரவு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏனைய சட்ட நடவடிக்கைகள் காரணமாக கலைக்கப்பட்ட வழக்கு (CHC 83/2021/CO) இன்னும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளது. | 2023 மார்ச் இல் கடன் வழங்குபவராக இ.ம.வ. உரிமைகோரலின் விவர ங்களுடன் தலையீடு செய்து ஆவணங்களை தாக்கல் செய்வதன் மூலம் இ.ம.வ. குறித்த முதன்மை வணிகரின் கலைத்தல் வழக்கில் தலையிட்டது. 2023 மார்ச் இல் சத்தியப் பிரமாணப் பத்திரம் மூலம் தனது கோரிக்கையை இத்திட்டம் சமர்ப்பித்தது. | இழப்பை அறவிடு தல் வேண்டும். |

### 3.3 காப்புறுத்தப்பட்ட வைப்புக்களுக்கு விதிக்கப்பட வேண்டிய வட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 நவம்பர் 15 ஆந் தேதியிட்ட 2023 இன் 01 ஆம் இலக்க வங்கியியல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 7 இன் படி, உரிமம் பெற்ற வங்கிகள் வங்கி மேற்பார்வை இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் படி முந்தைய நிதியாண்டின் இறுதியில் 14 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் மூலதனப் போதுமான விகிதத்தை பராமரிக்குமாயின். ஆண்டுக்கு 0.10 சதவீதம் வட்டமொன்றை செலுத்தப்பட வேண்டுமென்பதுடன ஏனைய உரிமம் பெற்ற வங்கிகளுக்கு ஆண்டுக்கு 0.125 சதவீதம் வட்டம் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களுக்கும், ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் மூலதனப் போதுமான விகிதத்தைப் பொருட்படுத்தாமல், மாத இறுதியில், அனைத்துத் தகுதியான வைப்புத்தொகையின் மொத்தத் தொகையைக் கணக்கிட்டு, ஆண்டுக்கு 0.15 சதவிகிதம் வட்டமாகச் செலுத்தப்பட வேண்டும். கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் மூலதனப் போதுமான அளவு விகிதம் 4.85 சதவீதத்தில் இருந்து 95.66 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, அந்த நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்கப்படும் வட்டத்தை உரிய அடிப்படையில் மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. நிதித் துறை பாதுகாப்புக்கான நிகர வலுவூட்டல் திட்டத்தின் நிதி ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள செயலாற்றலின் அடிப்படையிலான நிபந்தனைகளின்படி, இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையானது, உறுப்பு நிறுவனங்கள் செலுத்த வேண்டிய வட்ட விகிதத்தை சரிசெய்வதற்கான வழிமுறையை அங்கீகரித்து, வைப்புத்தொகை காப்பீட்டு மீதிகளை கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் அத்தகைய முறைப்படி வட்ட விகிதங்களை சரிசெய்வதற்கு தேவையான வழிமுறைகளை வழங்குதல் வேண்டும். | பிஎஸ்பீஏ இன் பிரிவு 55 இன் படி, ஒவ்வொரு உறுப்பினர் நிறுவனமும், அத்தகைய காலகட்டங்களு க்கான தகுதியான வைப்புத் தொகையின் மொத்தத் தொகையின் மீது கணக்கிட ப்பட்ட வட்டத்தை, அவ்வப் போது, சிபிஎஸ்எல் மூலம் தீர்மானித்த அத்தகைய விகிதத்தில், அத்தகைய நேரங்களில், மற்றும் தீர்மானிக்கப்படும் விதத்தில், வைப்பக காப்பீட்டு நிதிக்கு செலுத்த வேண்டும். அதன்படி, வட்ட விகிதங்கள் மற்றும் கணக்கீட்டு முறை ஆகியவற்றை நிர்ணயம் செய்ய கொள்கை முடிவுகள் அவ்வப்போது எடுக்கப்படும். விதிவிலக் கான சூழ்நிலைகளில், இ.ம.வ. ஆல் குறிப்பிடப்ப டும் காலத்திற்குள் வைப்பக காப்புறுதி நிதிக்கு அத்தகைய மேலதிக வட்டத்தை உறுப்பினர் நிறுவனங்கள் செலுத்துமாறு கோரும் அதிகாரம் இ.ம.வ. இக்கு காணப்படுகின்றது. வட்ட விகிதத்தில் தேவையான சீராக்கல்களை மேற்கொள்ளும் செயற்பா ட்டில் இ.ம.வ. ஈடுபட்டுள் ளது. | இடர் அடிப்படை யிலான வட்ட முறையை செயல் படுத்துவது குறித்து பரிசீலித் தல் வேண்டும். |

### 3.4 நிதியிலிருந்து செலுத்தப்பட்ட பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை வைப்பக காப்புறுதித் திட்ட விதிமுறைகளின்படி, 01 ஜனவரி 2012 அன்று அல்லது அதற்குப் பிறகு (14.11.2023 வரை அமலுக்கு வரும்) நாணயச் சபையின் உத்தரவின்படி உரிமத்தை இடைநிறுத்துதல்/இரத்துசெய்யும் பட்சத்தில், இழப்பீடு செலுத்துதல் நடைமுறைக்கு வரும். அதன்படி, ஏழு | இணங்குகின் றோம் | மீதமுள்ள இழப்பீடு செலுத்தப்பட வேண்டும். |

உறுப்பு நிறுவனங்களின் உரிமங்கள் 2018, 2019, 2020 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நாணயச் சபையால் இரத்து செய்யப்பட்டன/ இடைநிறுத்தப்பட்டன. 19 மார்ச் 2021 அன்று இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பின்படி, இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு மேலும் நிவாரணம் வழங்குவதற்காக, அத்தகைய நிறுவனங்களின் உரிமங்கள் இரத்து அல்லது இடைநிறுத்தப்பட்டால், திட்டத்தின் கீழான அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையை ரூபா 500,000 ஆல் அதாவது ரூபா 600,000 இலிருந்து ரூபா 1,100,000 ஆக அதிகரிக்க இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை முடிவு செய்திருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, நாணயச் சபையினால் உரிமங்கள் இரத்து செய்யப்பட்ட / இடைநிறுத்தப்பட்ட ஏழு நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த இழப்பீடு ரூபா 35,276.3 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 31,002 மில்லியன் அல்லது 87.88 சதவீதம் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறு திட்டத்தின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. உரிமம் இரத்து செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட உறுப்பினர் நிறுவனங்களின் தகுதியான வைப்பாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் இழப்பீடு வழங்குவதன் செயல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| **ஆண்டு (உரிமம் இரத்துச் செய்த / இடைநிறுத்திய)** | **நிறுவனங்களின் எண்ணிக்கை** | **செலுத்த வேண்டிய மொத்த இழப்பீடு (ரூபா மில்.)** | **202312.31 வரை செலுத்திய இழப்பீடு (ரூபா மில்.)** | **செலுத்திய சதவீதம்** |
|---|---|---|---|---|
| 2028 | 2 | 4,133.21 | 3,318.46 | 80.3 |
| 2019 | 1 | 1,190.74 | 1,074.31 | 90.2 |
| 2020 | 3 | 29,893.72 | 26,609.95 | 89 |
| 2023 | 1 | 58.61 | 0.27 | 0.5 |
| **மொத்தம்** | | **35,276.28** | **31,002.99** | **88** |

### 3.5 சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) செலுத்த வேண்டிய பொறுப்பு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| இந்தத் திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடு சார்பாக 08.03.2023 மற்றும் 10.11.2023 தேதியிட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) அனுப்பிய கடிதங்களின் படி, 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க SSCL சட்டத்தின் பிரிவு 2(இ) இன் படி, பகிரத்தக்க முறையைப் பயன்படுத்துவதன் மூலம் கணக்கிடப்படும் நிதிச் சேவைகளுக்கு உரித்தான 100 சதவீத பெறுமதி சேர்த்தலில் 2.5 சதவீதம் என்ற விகிதத்தில் SSCL ஐ செலுத்துவதற்குத் திட்டம் பொறுப்பாக உள்ளது. எவ்வாறாயினும், SSCL இன் கொடுப்பனவுகள் தொடர்பாக திட்டம் உடன்படவில்லை என்பது | இந்தத் திட்டம் அதன் 09.02.2024 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பின்வரும் காரணத்தின் அடிப்படையில் அதன் முடிவை மறுபரிசீலனை செய்யும்படி IRD இடம் கோரியது.<br>01. இந்தத் திட்டம் நிதிச் சேவைகளை வழங்கும் வணிகத்தை மேற்கொள்வதில்லை.<br>02. CBSL வழங்கும் | ஐஆர்டி உடன் தொடர்பு கொண்டு கூடிய விரைவில் பிரச்சினையை தீர்க்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. இன்றுவரை SSCL க்கான திட்டத்தின் பொறுப்பு குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இறுதி ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை. எனவே, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்காக எவ்வித SSCL தொகையையும் திட்டம் செலுத்தியிருக்க வில்லை. | எந்தவொரு சேவையும் SSCL சட்டத்தின் கீழ் விலக்கு அளிக்கப்பட்ட சேவைகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளமை. | |

**3.6 உறுப்பினர் நிறுவனங்களால் வட்டம் செலுத்துவதற்கு தவறியமைக்காக அபராதம் செலுத்துதல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 15 ஆந் தேதியிட்ட 2023 இன் 01 ஆம் இலக்க வங்கியியல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 7(iii) இன் படி,, எந்தவொரு உறுப்பு நிறுவனமும் செலுத்த வேண்டிய வட்டத்தை செலுத்துவதில் ஏதேனும் தவறு செய்தால், அத்தகைய கடனை செலுத்தாத காலத்திற்கு குறித்த உறுப்பினர் நிறுவனம் மத்திய வங்கிக்கு அபராதம் செலுத்த வேண்டிய பொறுப்பபுக்கு உட்படுகிறது. எவ்வாறாயினும், அபராதம் செலுத்தப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி, மேற்கூறிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பிடப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர் நிறுவனங்க ளுக்கு வழங்கப்படவுள்ள எதிர்கால பணிப்புரைக ளில், தவறிய தொகைக் கான அபராதத் தொகை யை செலுத்த வேண்டிய ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்கான விதிமுறை களை சேர்த்துக்கொள்ள இத்திட்டம் எதிர்பார்க் கிறது. | அபராதம் செலுத்த வேண்டிய காலக்கெடுவை குறிப்பிடுதல் வேண்டும். |

**3.7 நிதித் துறை பாதுகாப்பு நிகர வலுப்படுத்தும் செயற்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரசாங்கமும் சர்வதேச அபிவிருத்தி சங்கமும் 2024.01.31 அன்று அமெரிக்க டொலர் 150 மில்லியன் (SDR 112.8 மில்லியன்) சலுகை நிதியுதவிக்கான நிதித் துறை பாதுகாப்பு நிகர வலுவூட்டல் செயற்திட்டத்திற்கான நிதியுதவி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. வைப்பக காப்புறுதி திட்டத்தில் கவனம் செலுத்தி இலங்கையின் நிதித்துறை பாதுகாப்பு வலைப்பின்னலின் நிதி மற்றும் நிறுவன திறனை வலுப்படுத்துவதே இச்செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். இந்தச் செயற்திட்டமானது, 2024 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற செயற்திட்ட மூலதனமாக்கல், இலங்கை மத்திய வங்கிக்கான நிறுவன திறன் மேம்பாடு மற்றும் செயற்திட்ட அமுலாக்கமும் கண்காணிப்பும் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. | பயனுள்ள வைப்பக காப்புறுதி அமைப்பு களுக்கான உலக ளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப திட்டத்தின் நிறுவன மற்றும் நிதித் திறனை அதிகரிப்பதே இந்த செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். | செயல்படுத்தும் காலத் தில் இலக்குகளை அடைதல் வேண்டும். |